# திராவிடப் பேரரசர் அழைக்கிறார்!

தீரர் கோட்டமாம் திருச்சியில் வரும் மார்ச் 9 அன்று நடைபெறும் மாபெரும் மாநாட்டிற்கு வருக உடன்பிறப்பே! என வளமார்திராவிட முன்னேற்றக் கழகத்தின் கம்பீரத்தலைவர், திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் வாஞ்சையுடன் அழைக்கிறார்.

இயக்கத்தின் இதயமாக, முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்ட , மலைக்கோட்டை நகருக்கு, மாநாடுகளின் மன்னன், அண்ணன் கே.என்.நேரு, தனது சாதனை களைத் தானே, முறியடிக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வில் பங்குபெறும் பெரும்பேறு பெற திருச்சியில் திரளுவோம்!

தலைவர் கலைஞர் அவர்களை முதன்முதலில் சட்டமன்றம் அனுப்பிய குளித்தலையை தன்னகத்தே கொண்ட திருச்சி மண்டலம்.

தீரர்கள், தியாகிகள், திணவெடுத்த தோள்களோடு தீட்டிய வாட்களாய் சீறிப்பாய்ந்து, சிந்தை நிறைந்த தலைவர் கலைஞருக்கு அனுக்கிரக தளபதிகளைப் பெற்றுத் தந்த திருச்சி!

கால்முளைத்த நாள் முதலாய் கரம்பிடித்து வளர்த்து, அரசியல் போதித்த அறிவாசான் தந்தை பெரியாருக்கு, தனது ஆட்சியையே அமைதிமிகு அண்ணா காணிக்கையாக்கிய திருச்சி!

தமிழ்த் திரையுலகின் முதல் சூப்பர் ஸ்டார், ஏழிசை வேந்தர் தியாகராஜ பாகவதரைத் தந்த திருச்சி! நடிகவேள் ராதா தனது நலன்விரும்பி வந்த திருச்சி!

அசகாயசூரர் அன்பிலார், அண்ணன் பொய்யாமொழி உருமலுடன் உலவிய திருச்சி!

தேர்தல்களை சந்திக்கும் காலத்திலெல்லாம் திராவிடமுன்னேற்றக்கழகம் தன்னையும், தனது பலத்தையும் சோதித்தறியும் உரைகல் திருச்சி!

இரண்டாம் உலகப்போரின் கதாநாயகன் இங்கிலாந்து வின்ஸ்டன் சர்ச்சில் விரும்பி புகைத்த, சுருட்டு, உரையூர் சுருட்டு.

அந்த உரையூரை உள்ளடக்கிய தொழில் கேந்திரம் திருச்சி!

ஆயிரம் ஆண்டின் முன்னே அகண்ட காவிரிக்கு காரிகாற்பெருவளத்தான் கல்லணையெழுப்பிய திருச்சி!



வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

எண்ணற்ற தியாக மறவர்தம் இரத்தக்கரையும், மூச்சுக்காற்றும், பேச்சுக்காற்றும் முழுவதுமாய் நிறைந்துவிட்ட பொன்மலைப்பட்டி மத்தியச் சிறைச்சாலை அமைந்த திருச்சி!

சைவமும், வைணமும், சரிநிகர் பலத்துடன் கலைகள் வளர்த்த திருத்தளங்கள் நிறைந்த திருச்சி!

இத்தகைய சிறப்புக்கள் இன்னும், இன்னும் கொண்ட சோழவளநாட்டு சோர்விலா திருச்சி சிறுகனூரில் 10 இலட்சம் நிர்வாகிகள் பங்கு பெறும் மாநாட்டிற்கு நமது ஒப்பரிய, உயிரனைய தலைவர் திராவிடமாடல் ஆட்சி நாயகர் தளபதியவர்கள் அழைக்கிறார்.

உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்தியாவின் மொத்த படைத் துருப்புக்களின் எண்ணிக்கை 10 லட்சத்திற்குள் என்பார்கள். ஆனால் இரண்டு கோடியளவிற்கு தொண்டர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் கட்டுக்கோப்புடன் இயக்கத்தை நடத்தும் காட்சியைக் காண வாரீர் என்றே உலகிற்கு உணர்த்தும் மாபெரும் நிர்வாகிகள் சங்கமப் பெருவிழாவால், திருச்சிமாநகர் விழாக்கோலம் பூணவிருக்கிறது.

ஆட்சியேற்ற ஐந்தாண்டுகளில் சொன்ன பல திட்டங்களையும், சொல்லாத பலதிட்டங்களையும், நாளும் நிகழ்த்திவரும் நமது தமிழ்நாடு முதலமைச்சர்,

கல்லுக்குள் தேரைக்கும் கசிந்து உணவளிக்கும் இறைவன் போல், அட்சயப்பாத்திரம் போல் அன்புள்ளம் கொண்ட திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் மிகுந்த மனநிறைவுடன் நமையெல்லாம் சந்திக்கும் திருப்புமுனை மாநாட்டில் திருச்சி மாநகரில் திரண்டிடுவோம்!

எதை வேண்டுமானலும் செய். வெற்றி பெறுவது நீயாத்தான் இருக்கவேண்டும் என்கிறது அமெரிக்க தேர்தல் சித்தாந்தம்.

ஆனால் அன்பு செய்! மக்களின் அடிப்படை, அத்தியாவசிய, அவசியங்கள் புரிந்து திட்டமிட்டு, சட்டமியற்றி, பலன் தந்து நலன்காத்து, அவர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள் என்கிறார் நமது திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள்.

ஒருமுறை நாவலர் நெடுஞ்செழியன், " நான் இருநூறு நாட்களுக்கு மேல் தமிழ்நாட்டின் தற்காலிக முதல்வராக இருந்துள்ளேன் " என்றார்.

தலைவர் கலைஞரோ, "நான் அதைவிட அதிக நாட்கள் தமிழினத்திற்காக சிறையிலிருந்திருக்கிறேன் " என்றார்.

அதுபோல தமிழ்நாடு முதலமைச்சர் எனும் சிம்மாசனத்தை தளபதியவர்கள் அலங்கரித்ததைவிட, தமிழ்நாட்டு மக்கள் நல்வாழ்வையே தனது உயிர் மூச்சாய், உயர் மூச்சாய் சூடிக்கொண்ட சுறுசுறுப்பின் மறுபெயர் நமது தலைவரவர்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் என மூன்று தலைமுறை இயக்கத் தோழர் இன்னும் வேகமாகப் பணியாற்றும் பெருமை கொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

அது நான்காவது தலைமுறையாக தலைவர் தளபதியவர்களை ஏற்று, இதோ ஐந்தாம் தலைமுறைக்கு ஐயமின்றி இளந்தலைவர் உதயநிதி உருவாகிறார் எனும் உவகையோடு, குடும்பப் பாச உணர்வோடு வெற்றி நடைபெறுகிறது.

"சிங்கிள் டீ குடித்து, தி.மு.க. தொண்டன் தனது கட்சியின் தேர்தல் வெற்றிக்கு பாடுபடுவான்" என்று சொன்ன முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் தொடங்கி, "தேர்தலென்றால் என்னவென்று தெரியுமா? தி.மு.க. தொண்டன் சுழலு வான்! இதுமாதிரி தொண்டர்களை இந்தியாவில் வேறெங்கும் பார்க்க முடியாது" எனச் சொன்ன இந்நாளைய பத்திரிக்கையாளர் வரை நம்மை குறித்த கணிப்பு வீண்போனதில்லை என்ற நம்பிக்கையை மீண்டும் தலைவருக்கு நாம் வழங்க, தேர்தல் களத்தில் எந்த ஆயுதத்தையும், அதன் கூர் மழுங்கச்செய்யும் அறிவாயுதத்தை மீண்டும் தயார்படுத்த, இளைஞரணியினர் இன்சொல்ல பெற, இயக்கவரலாற்றை இன்னும் அறிய, ஆலோசனைகள் பெற, தேர்தல் உத்திகள் பயில, தென்னகத்தில் மட்டுமின்றி, இந்தியதிருட்டில் தொடர் தேர்தல் வெற்றிவீரனாகத் திகழும் திராவிடப் பெரு வேந்தர் அழைக்கிறார் திருச்சி மலைக்கோட்டை மாநகருக்கு!

"என் இனிய உடன்பிறப்பே! எனது இதயத்தின் துடிப்பே! உன்னால் தலைவனாக ஏற்கப்பட்ட இந்த தொண்டன் வேண்டுகிறேன். உனக்கு ஆணையிட்டு எனக்குப் பழக்கமில்லை.

அதனால் எனது இதயம் நிறைந்தவனே! ஓங்கலிடைவந்த உதயசூரியனே! உதவாதினி ஒரு தாமதம். உடனே எழுக! என் உடன்பிறப்பே! "

என்று அன்பால் நம்மை அரவணைத்த உயிர்த்தலைவர் கலைஞர் அவர்களின் வேண்டுகோள் நமது செவிகளில் ரீங்காரமிடட்டும்!

தளபதியவர்களின் மனதைக் கவர்ந்த, "கட்டிய நாய்களல்ல நாம்! எட்டிய மட்டும் பாய்வதற்கு. தட்டிய மாத்திரத்தில் தருக்கர் தலைவீழ்த்தி, வெற்றி தனைக் குவிப்போம்! " எனும் உற்சாகமிகு தலைவர் கலைஞர் அவர்களின் இந்த வரிகளையும் இதயத்தில் ஏற்று செல்வோம் திருச்சி திருவிடத்திற்கு!

ஜனநாயகத்தைக் காத்திட தனது இளமையை பலிகொடுத்த தலைவர் அழைக்கிறார்!

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்"** எனும் குறள்படி ஏற்றப் பொறுப்புக்களை எள்முனையும் குறைவின்றி முடித்த ஏந்தல் அழைக்கிறார்!

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக தலைமுறைகளை தாரை வார்த்துக் கொடுத்த தலைவர் கலைஞரின் பிள்ளை அழைக்கிறார்!

" All roads lead to Rome" என்பது போல, எல்லா சாலைகளும், அண்ணா சாலையில் உள்ள அறிவாலயத்தை நோக்கியே! என்ற புதிய வரலாற்றுச் சொற்றொடரை உருவாக்கிய அரசியல் வித்தகர் அழைக்கிறார்!

இப்போது சென்றிடுவோம் மலைக்கோட்டைக்கு!

இன்னும் சில நாட்களில் மீண்டும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு! எனும் உறுதியை, உத்தரவாதத்தை தரும் உன்னையும், என்னையும் காண,

காத்திருப்பார் தலைவர் தளபதியவர்கள்!

கனிந்து, கனிந்து! நம்மை, நினைந்து, நினைந்து!

திரளட்டும் தளபதியின் சேனைகள்!

மிரளட்டும் சனாதன ருத்ராட்சப் பூனைகள்!

வெற்றி நமதே!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி, களக்காடு, நாங்குநேரி, வள்ளியூர், இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தினை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வடக்கன்குளத்தில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று கூட்டுக் குடிநீர் திட்ட தண்ணீர் குழாயை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், ஞான திரவியம், ஜோசப் பெல்சி, அலெக்ஸ் அப்பாவு உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.

## ஒன்றிய அரசின் நிதி மறுப்பு கொள்கையைத் தாண்டி

# சிக்சர் மேல் சிக்சர் விளாசுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

### தினகரன் நாளேடு பாராட்டு!

**சென்னை, மார்ச் 6 -**

**ஒன்றிய அரசின் பாரா முகமம், கடுமையான நிதி மறுப்புக் கொள்கை என பல தடைகளை தாண்டி, சிக்சர் மேல் சிக்சர் விளாசுகிறார், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்று தினகரன் நாளேடு தமது தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.**

*அது வருமாறு:-*

*தமிழக அரசு சார்பில் எத்தனையோ மக்கள் நல திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வந்தாலும், பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு பெற்றுள்ள திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். இத்திட்டத்தின்கீழ், தகுதியுள்ள பெண்களின் வங்கி கணக்கில் மாதம்தோறும் 15ம் தேதி தலா ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், கடந்த மாதம் 15ம் தேதிக்கு பதிலாக பிப்.13 அன்று தலா ரூ.5,000 வரவு வைக்கப்பட்டது. இந்த மெசேஜ் பெண்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.*

*"தேர்தலை காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்க பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல் அரசு. 2026 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம், கோடை கால சிறப்பு தொகுப்பாக ரூ.2 ஆயிரம் என மொத்தம் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 1.31 கோடி மகளிர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது" என முதல்வர் மு.க. ஸ்டாலின் விளக்கம் அளித்தார். இந்த இன்ப அதிர்ச்சியில் இருந்து தமிழ்நாட்டு பெண்கள் மீள்வதற்குள், மார்ச் 3ம் தேதி மேலும் ஒரு ஜாக்பாட் அறிவிப்பு வெளியிட்டார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.*



தினகரன்

மார்ச் 5, 2026 வியாழக்கிழமை

அடுத்த ஜாக்பாட்...!

தமிழக அரசு சார்பில் எத்தனையோ மக்கள் நல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும், பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு பெற்றுள்ள திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இத்திட்டத்தின்கீழ், தகுதியுள்ள பெண்களின் வங்கி கணக்கில் மாதம்தோறும் 15ம்தேதி தலா ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், கடந்த மாதம் 15ம் தேதிக்கு பதிலாக பிப்.13 அன்று தலா ரூ.5,000 வரவு வைக்கப்பட்டது. இந்த மெசேஜ் பெண்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

"தேர்தலை காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்க பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல் அரசு. 2026 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம், கோடைகால சிறப்பு தொகுப்பாக ரூ.2 ஆயிரம் என மொத்தம் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 1.31 கோடி மகளிர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது" என முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

*அதாவது, முதியோர் உதவித்தொகையுடன் சேர்த்து கூடுதலாக ரூ.2 ஆயிரம் வங்கியில் வரவு வைத்து அதிரடியாக உத்தரவிட்டார். சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதியத்தொகை பெறும் முதியோர், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தொகையை சிறப்பு நிதியாக வழங்கினார். சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள் என மொத்தம் 29 லட்சத்து 29 ஆயிரம் பேருக்கு தலா ரூ.3,200, 5 லட்சத்து 92 ஆயிரம் மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.3,500, பராமரிப்பு உதவித்தொகை பெற்று வரும் 2 லட்சத்து 58 ஆயிரம் மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு தலா ரூ.4 ஆயிரம் என முதல்வரின் அறிவிப்பை ஏற்று, வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.*

*மேலும், மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரை மீன்பிடி தடைக் கால உதவித்தொகையாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.8 ஆயிரம் வீதம், 1 லட்சத்து 62 ஆயிரத்து 900 குடும்பங்களுக்கு சிறப்பு நிதி, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந் தேயிலைக்கு கிலோ இரண்டு ரூபாய் ஆதார விலை ரூ.8.53 கோடி நிதி ஆகிய வற்றையும் வழங்கி, அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தார். மகளிர் உரிமைத்தொகை மட்டுமின்றி, காலை உணவு திட்டம், புதுமைப்பெண், நான் முதல்வன், விடியல் பயணம், தமிழ் புதல்வன், இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட முத்தான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இவை, தமிழ்நாட்டு பெண்கள் மற்றும் மாணவர்களின் வளர்ச்சியை மையமாக கொண்டவை.*

*ஒன்றிய அரசின் பாரா முகம், கடுமையான நிதி மறுப்பு கொள்கை என பல தடைகளையும் தாண்டி, சிக்சர் மேல் சிக்சர் விளாசுகிறார், நமது முதல்வர். பெண்கள் உள்பட அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் அள்ளி அள்ளி கொடுக்கும் தமிழக முதல்வர் கூறிய வார்த்தை என்ன தெரியுமா? "மீண்டும் சூளுரைக்கிறேன், தமிழகத்தின் வளர்ச்சி பாதையில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டேன்..." என்பதுதான் அது. திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலன் காக்கும் மகத்தான திட்டங்களால் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக மிளிர்கிறது. தொடரட்டும் வெற்றிப்பயணம், வெல்லட்டும் தமிழ்நாடு..!*

*இவ்வாறு தினகரன் நாளேடு குறிப்பிட்டுள்ளது.*

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் பங்கேற்பு!

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*இராமநாதபுரம், மார்ச் 6 -*

*இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (6.03.2026 வெள்ளிக்கிழமை) பிற்பகல் 4.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.*



*மண்டலத் தேர்தல் பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனத்துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர். எஸ்.இராஜகண்ணப்பன், மாவட்டக் கழகப் பொருளாளர் செ.முருகேசன் எம்.எல்.ஏ., தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் (பரமக்குடி தொகுதி பார்வையாளர்) மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் (திருவாடனை தொகுதி பார்வையாளர்), புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் (முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர்) ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.*

*ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளார்கள், துணை அமைப்பாளார்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளார்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**பொருள்:** *மார்ச் 9 மாநில மாநாடு திருச்சி,*

*கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.*



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், ஜமீன்கோடாங்கிபட்டியில் ரூ17.25 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார் ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு, கிளைச் செயலாளர் சந்தனவேல் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஜஸ்டின், பிரபாகரன் இளைஞர் அணி துணை அமைப்பாளர் செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.